செ.கு. எண்: 91

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.3.2012

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்கல்பட்டு கொள்ளைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணு என்பவரின் மகன் திரு. பச்சையப்பன் என்பவர் கல்பட்டு மதுரா, நீப்பளாம்பட்டு கிராமத்தில் 29.2.2012 அன்று நடந்து செல்லும் போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பச்சையப்பன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான பச்சையப்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்